**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS 128/2021**

**06.04.2023**

**வா.சா.1 அருண்மொழி க/பெ.புகழேந்தி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் வழக்கில் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் பெயர் மாரியப்பன். என் தகப்பனார் 2008 மார்ச் மாதம் காலமானார். நான் வழக்குரையில் கண்டுள்ள விவரங்களை படித்து பார்த்தேன். நான் இவ்வழக்கில் சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டுள்ளேன். மொத்த எத்தனை அயிட்டத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்று தெரியாது. சுமார் 60 மா விஸ்தீரணத்திற்கு வழக்கிற்கு தாக்கல் செய்துள்ளேன். ஏக்கர் கணக்கில் 20 ஏக்கருக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் முதலாவதாக அம்பிகாபதியை திருமணம் செய்து கொண்டார். அவர் உயிருடன் உள்ளார். அம்பிகாபதிக்கு சிவகலை, மோகன்தாஸ், யோகானந்தம், ஜான்சிராணி (எ) லெட்சுமி ஆகியோர் வாரிசுகள். அதில் ஜான்சிராணி (எ) லெட்சுமி இறந்துவிட்டார். அவரது கணவர் பெயர் தெரியாது. அவரது பெயர் சிவாஜி என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஜான்சிராணி (எ) லெட்சுமி – சிவாஜி தம்பதிக்கு சிவமதி என்ற குழந்தை உள்ளார் என்றால் சிவமதி உள்ளார் ஆனால் யார் குழந்தை என்று தெரியாது. ஜான்சிராணி (எ) லெட்சுமி எனக்கு சகோதரி உறவு ஆகும். எனது தாயார் பெயர் பிச்சைமணி. மாரியப்ப வள்ளால தேவர் அம்பிகா அம்மாள் உயிருடன் இருக்கும்போது பிச்சைமணியுடன் சேர்ந்து வாழ்ந்தாலும் மனைவி என்ற அந்தஸ்து கிடையாது என்றால் சரியல்ல.

**( 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**